**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 282/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : சுப்புராயன் |
| Father's Name/ Husband's Name | : நன்னி |
| Village & Taluk | : மானந்தல் மேட்டூர் |
| Calling | : விவசாயம் |
| Age | : 76 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.11.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 கோவிந்தம்மாள், அ.சா.2 நாராயணசாமி ஆகியோர்களை எனக்கு தெரியும் அவர்கள் எனது பக்கத்து நிலத்துக்காரர்கள். ஆஜர் எதிரியை தெரியும். பட்டியல் சாட்சி-5 மணி என்பவரை தெரியும் அவர் சுமார் 2 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். கடந்த 06.01.2015ம் தேதி காலை 06.00 மணிக்கு நான் எனது நிலத்தில் இருந்தேன் என்றால் இல்லை. அப்போது ஆஜர் எதிரி அ.சா.2ன் நிலத்தில் இருந்து மாடு பிடித்து கொண்டு வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதை கேட்ட அ.சா.1 யை எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கி கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் தெரியாது. நான் சண்டையை நேரில் பார்த்துவிட்டு அதனை

காவலர்கள் விசாரணையின்போதும் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.